அ. சே. ஆ. சுற்றறிக்கை : 02/2016

எனது இல : PSC/APP/HB/02-2016

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,

இல 177,

நாவல வீதி,

நாராஹேன்பிட்ட,

கொழும்பு 05.

2016 மே மாதம் 02 ஆந் திகதி.

சகல அமைச்சுக்களினது செயலாளர்களுக்கும்,

திணைக்களத் தலைவர்களுக்கும்.

**நியமனம் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பாக ஏற்படும் தாமதங்களை தவிர்த்துக்கொள்ளல்**

அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து நியமனம் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பாக சிபாரிசுகளை முன்வைக்கும் போது ஏற்புடைய சகல ஆவணங்களையும் பூரணப்படுத்தி ஒரே தடவையில் சமர்ப்பிக்காத காரணத்தினால் மீண்டும் மீண்டும் அது தொடர்பாக வினவுவதற்கு நேரிடுகின்றது. அதன் காரணத்தினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இறுதித் தீர்மானத்தை வழங்குவதில் ஏற்படும் தாமதத்தை தவிர்ப்பதற்காக பின்வரும் வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டுமென அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

02. நியமனம் மற்றும் பதவி உயர்வுகளுக்கு ஏற்புடைய நேர்முகப் பரீட்சைகள் தொடர்பாக ஏற்புடைய நிர்வாக அதிகாரியின் சிபாரிசை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கின்ற ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே அந்த நேர்முகப் பரீட்சையினது அட்டவணைகளின் மூலப் பிரதிகள், ஏற்புடைய நேர்முகப் பரீட்சை சபையின் சிபாரிசுகள் உள்ளடங்கிய அறிக்கைகள், ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் புள்ளிகள் வழங்க பயன்படுத்திய ஏற்புடைய சகல ஆவணங்களினதும் சான்றுப்படுத்திய நிழற் பிரதிகள் உள்ளடங்கிய சான்றிதழ் கோவைகள் என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. நியமனம் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பான ஏற்புடைய ஏனைய விடயங்களுக்குரிய சிபாரிசுகளை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கின்ற போது www.psc.gov.lk இணையத்தளத்திலுள்ள மாதிரிப் படிவங்கள் மற்றும் சரிபார்ப்பு பட்டியல்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சகல தேவைப்பாடுகளும் நிறைவுசெய்யப்பட்டிருப்பதை ஏற்புடைய நிர்வாக அதிகாரி அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எச்.எம்.காமினி செனெவிரத்ன

செயலாளர்

அரசாங்க சேவை ஆணைக்குழு